விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 093 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 08 புதன்கிழமை (22.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# திவாலான நிலையிலிருந்து மீண்டெழுந்துவிட்டது நாடு

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழுவினால் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான அங்கீகாரம் கிடைத்துள்ள நிலையில், கடனை மறுசீரமைக்கும் வலிமை கொண்ட நாடு என்ற சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுள்ளதாகவும் அதன்படி இலங்கை வங்குரோத்தான நாடல்ல என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வன்னேரிக்குளம் பகுதியில் கடந்த 17ஆம் திகதி இரவு இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

02

## பயங்கரவாத சட்டத்தில் கைதான 9 பேர் விடுதலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான்பகுதியில்வைத்து பயங்கரவாத தடைச்

04

### மட்டக்களப்பில்

## திருமந்திர அரண்மனை 24ஆம் திகதி திறப்பு

### கலாநிதி ஆறு.திருமுருகன்

(யாழ்ப்பாணம்)

கிழக்கிலங்கையில் சிவபூமி திருமந்திர அரண்மனை திறந்து வைக்கப்படவுள்ளது என செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

11

## 330 மில்லியன் அமெரிக்க டொலர் நாளை இலங்கைக்கு வழங்கப்படும்

### சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

நீடிக்கப்பட்ட நிதியுதவிச் செயற்றிட்டத்தின்கீழ் எதிர்வரும் 48 மாதங்களில் இலங்கைக்கு 2.286 பில்லியன் டொலர் நிதியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை அனுமதியளித்துள்ளது.

அதன்படி முதற்கட்டமாக 330 மில்லியன் டொலர் நிதி நாளை இலங்கைக்கு வழங்கப்படுமென சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அதேவேளை இலங்கை அரசாங்கம் அமுல் படுத்திவரும் மிக

12

## நேருக்கு நேர் மோதி மோ.சைக்கிள் விபத்து

### ஒருவர் பலி; இருவர் படுகாயம்

(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் உயிலங்குளம் பிரதான வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் படு

11

## எரிபொருள் விலை ஏப்ரலில் குறையும்

### எரிசக்தி அமைச்சர்

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் எரிபொருளுக்கும் டிசம்பரில் மின்கட்டணத்திற்கும் நிவாரணம் அளிக்கப்படும் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்

11

## குடத்தனையில் விபத்து; தந்தை பலி; மகள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு குடத்தனைச் சந்தி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணம் அடைந்துள்ளார்.

அத்தோடு பெண் ஒருவர் படுகாயம் அடைந்துள்ள நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

11

### பொருளாதாரத்தில் பின்தங்கிய

## யாழ்.பல்கலை மாணவர்களுக்கு இந்திய அரசால் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேருக்கு, இந்திய அரசாங்கத்தினால் வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்காக ஒவ்வொருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபாய் விசேட நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள இலங்கைக்கான இந்தியத்

11

### வடக்கு பாடசாலைகளுக்கான

## பாடப் புத்தகங்கள், சீருடைகள் வழங்கும் நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்துக்குட்பட்ட 5மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு 2023ஆம் ஆண்டுக்கான இல [illegible] சீருடை மற்றும் [illegible] பாடப் புத்தகங்கள் வழங்கும் தொடக்க நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

அந்தவகையில் யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, யா/வேலணை மத்திய கல்லூரி, யா/நெல்

04

## சுற்றுலா சென்ற நால்வர் பலி

(அம்பாறை)

அம்பாறையில் இருந்து நேற்று வெல்லவாய - எல்லாவல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்றவர்களில் 4 இளைஞர்கள் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக தகவல் வெளியாகியி

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயம் பலசரக்கு மாளிகை

## திறப்புவிழா அழைப்பிதழ்

23.03.2023 வியாழக்கிழமை காலை 07.46 இருந்து 09.16 வரையுள்ள சுபவேளைதனில் இல.09 பழைய சந்தை நெல்லியடியில் உங்கள் **உதயம் பலசரக்கு மாளிகை இனிதே** திறந்து வைக்கப்படுகிறது.

**வாடிக்கையாளர்கள்,அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

உரிமையாளர்

**உதயம் பலசரக்கு மாளிகை**
**இல.09, பழைய சந்தை நெல்லியடி.**
**077 787 3648, 074 382 0710**

(C-6204)


## விபத்தில்...

விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

கிளிநொச்சியில் இருந்து வன்னேரிக் குளம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும், வன்னேரிக்குளம் பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார்சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில், இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிரு ந்து ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

திருமணமாகி 4 மாதங்களேயான, 34 வயதுடைய வசந்தரூபன் சுமன் என்பவரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (4,7,316)

## மயங்கி விழுந்த மாணவன் உயிரிழப்பு

பாணந்துறை பகுதியில் அமைந்துள்ள பாடசாலை யொன்றில், மாணவன் ஒருவன் திடீரென மயங்கி வீழ்ந்தநிலையில் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை வடக்கு பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய மாணவன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் பாடசாலையில் சக மாணவர்களுடன் விளையாடிக்கொண்டிருக்கும் போது திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக சுருண்டு வீழ்ந்துள்ளார்.

பின்னர் அவர் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (4,7)


## வட மாகாண மக்களுக்கு ஓர் நற்செய்தி

**ஐரோப்பிய நாடுகளுக்கான விசிட் விசா ஒரு மாத காலத்தில் ஒழுங்குபடுத்தி தரும் நிறுவனமான**

**Hybrid International Hub (pvt) Ltd**

லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, நியூஸ்லாந்து ஆகிய நாடுகளுக்கான மாணவர் விசா 100% உத்தரவாதத்துடன் முற்கட்டணம் ஏதுமற்ற Sponsor கட்டணங்களற்ற சேவையினையும் வழங்கி வருகிறார்கள்.

நேர்த்தியானதும் நம்பகரமானதுமான சேவையினை பெற்றுக் கொள்ளுங்கள்

(C-6201)

**Contact Us**
LIC Tower - 1st Floor
No.36, Vaithilingam Thuraisamy Road
(Near to Vembady High School)
TP No : 021 222 1265 / 076 250 0098
E.Mail : hybridinternational37@gmail.com



## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை

### வர்த்தக நிலையங்களுக்கான ஏலம் விடுதல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 05.04.2023 ஆம் திகதி நடைபெறவுள்ளது. பொங்கல் உற்சவ காலங்களில் வியாபாரம் செய்கின்ற வர்த்தகர்களுக்கான **'கடை ஏலம் விடுதல்'** எதிர்வரும் 26.03.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும் என்பதை வியாபாரம் செய்ய ஆர்வமுள்ள வர்த்தகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**குறிப்பு**

- ஏலத்தின் போது முழுத்தொகையும் செலுத்தப்படல் வேண்டும்.
- பொலித்தீன் தடைசெய்யப்பட்டுள்ளது.

**ஆலய பரிபாலன சபை**
**கரைச்சி புளியம்பொக்கணை**
**நாகதம்பிரான் ஆலயம்**

(C-6205)



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 08 . 02 . 1944



விண்ணில் 13 . 04 . 2021

**ஆங்கிலப் பேராசான்**

**அமரர் K.C. சிவசுப்பிரமணியம்**

ஈராண்டு சென்றதுவோ ஐயா சென்று
ஈன்றதாய் சுற்றமொடு உறவு நண்பர்
இவர் போல எவரென்று ஏங்க வைத்து
ஆன்றகன்ற புலமையால் அகிலம் தன்னில்
அசையாத பேர்நாட்டி நின்ற செம்மல்
ஊன்கொண்ட பேறதனை உவந்து ஏற்றி
உயிருக்கே ஊதியம் கொடுத்த வள்ளல்
ஈராண்டு சென்றதுவோ நீரும் சென்று
எல்லோரும் வாடுகிறோம் வழியே இன்றி

அன்போடும் பண்போடும் இல்லான் பிள்ளை
அயலவர் மருமகன் பேரர் சொந்தம்
இன்பமுற மாணவர்கள் பலர்க்கும் வாழ்வில்
ஏணியென இருந்தே நீர் உலகை வென்றீர்
நன்றேயும் பதம்போற்றி நடப்பதோடு
நல்லவழி ஆயிரம் பேர்க்கு காட்டும்
ஈன்றபுகழ் மாணவரும் புவியை வெல்வர்
இதயமதில் என்றென்றும் நீவிர் வாழ்வீர்.

(C-6202)

**உங்கள் பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், மாணவர்கள்**



# VILLAGE HOTEL

VILLAGE HOTEL Northern Point

## யாழ் - கொழும்பு சேவை மீண்டும் ஆரம்பம்

**AIRPORT PICK UP DROP SERVICE**

அன்னை முத்துமாரி பேரூந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதனை அறியத் தருகின்றோம்.

**- VILLAGE HOTEL நிர்வாகம் -**



**077 544 8503**

(14967)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் தொடர்பான செயற்பாடுகளில் தலையிட மாட்டோம்- சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

**உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான செயற்பாடுகளில் தலையிட மாட்டோம் என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.**

மேலும் உள்ளூராட்சித் தேர் தலை ஒத்திவைக்க வேண்டும் என இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் ஒரு போதும் பரிந்துரை செய்ய வில்லை என்றும் குறிப்பிட்டு ள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பி லேயே இலங்கைக்கான சர்வ தேச நாணய நிதியத்தின் தலைவர் மசாஹிரோ நோசாகி இதனை தெரிவித்துள்ளார். (நி)

# யார் ஆட்சி அமைத்தாலும் ஐ.எம்.எப் இற்கு அடிபணிய வேண்டும்

## அமைச்சரவை பேச்சாளர்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத் திடமிருந்து பெறப்பட்ட விரி வாக்கப்பட்ட நிதி வசதி பற்றிய உண்மைகள் பொதுமக்களி டமிருந்து மறைக்கப்பட மாட் டாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன உறுதியளித்து ள்ளார்.

நேற்றுக் காலை அமைச் சரவை முடிவுகளை அறிவிக் கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் இதனைத் தெரி வித்தார்.

சர்வதேச நாணய நிதிய த்தின் உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்டதும் அது தொட ர்பான அனைத்து விடயங் களும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என ஜனா திபதி ரணில் விக்கிரமசிங் கவும் உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் இலங் கைக்கு சர்வதேச நாணய நிதியத்தால் அங்கீகரிக்கப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதிவசதி குறி த்து கருத்துத் தெரிவித்த பந்துல குணவர்தன, உடன்படிக்கை யின்படி, அடுத்த 48 மாதங்க ளுக்குள் யார் ஆட்சிக்கு வந்தா லும், சம்பந்தப்பட்ட அரசாங்கம் விதிமுறைகளின்படி செயற்பட வேண்டும் என்று விளக்கி னார்.

அரசியல் கருத்துக்களால் சூழப்பட்டிருந்தாலும், திட்ட த்தை செயற்படுத்த வேண்டும்.


"நாங்கள் ஒப்புக்கொண்ட நிபந்தனைகளின்படி செயற் படாமல் இதற்கு முன் 16 முறை சர்வதேச நாணய நிதியத்தை ஏமாற்றி விட்டோம்.

இம்முறையும் அது நடந் தால் நாடு மிகப் பெரிய பாதா ளத்தில் விழும். எனவே, அரசி யல் நிகழ்ச்சிநிரல்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கு மாறாக, வேலைத் திட்டத்திற்கு இணங்கிப் பணியாற்றுவதில் தேசிய ஒருமித்த கருத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்துவது முக்கியம் என்று நான் நம்புகிறேன்".

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்துக்கு எதிரான அரசியல் கட்சிகள் இது தொடர்பான மாற்று ஆலோ சனைகள் மற்றும் சாத்தியமான தீர்வுகளை பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும்.

அதன் பின்னர் விவாதம் அல்லது வாக்கெடுப்பு நடத்த முடியும் என்பதும் தனது தனிப்பட்ட கருத்து என்றும் அமைச்சர் தெரிவித்தார். (நி)

# 40 பயணிகளுடன் சென்ற பேருந்து தீப்பிடித்து எரிந்தது



(இரத்தினபுரி)

ஹொரணை - இரத்தினபுரி வீதியில் பொரலுகொட முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கு முன் பாக தனியார் பேருந்து ஒன்று நேற்று தீப்பற்றி எரிந்துள்ள தாக ஹொரணை பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரியிலிருந்து பாணந்துறை நோக்கி பயணி களை ஏற்றிச் சென்ற பேருந்து ஹொரணை பொரலுகொட முத லீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கு முன்பாக உள்ள தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டு பயணிகளை ஏற்றிக்கொண்டு மீண்டும் பய ணத்தை ஆரம்பித்தது.

அப்போது பேருந்தில் நாற் பதுக்கும் மேற்பட்ட பயணிகள் காணப்பட்டனர். இருப்பினும் இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி)

# இலங்கையில் கடந்த ஆண்டிலும் தொடர்ந்த மனித உரிமை மீறல்கள்

## அமெரிக்கா குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

இலங்கையில் கடந்த ஆண்டி லும் குறிப்பிடத்தக்க மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணை க்களம் குற்றம் சுமத்தியுள் ளது.

மனித உரிமை நடைமுறைகள் தொடர்பான வருடாந்த அறிக்கை யில் அமெரிக்க இராஜாங்கச் செய லாளர் அன்டனி பிளிங்கன் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள் ளார்.

மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊழலில் ஈடுபடுபவர் களை அடையாளம் கண்டு விசாரணை செய்து அவர் களை தண்டிக்க அரசாங்கம் குறைந்தபட்ச நடவ டிக்கை களையே எடுத்துள் ளது.

மேலும் கடந்த மே 9 அன்று கொழும்பில் அமைதியான போரா ட்டக்காரர்கள் மீது அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தி யதையும் வன்முறைச் சம்பவத்தின் பின்னர் 3,300 இற்கும் மேற் பட்டவர்கள் கைது செய்யப்பட்ட தையும் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் கைது செய்ய ப்பட்டவர்களில் பெரும்பான்மை யானவர்கள் அமை தியான முறை யில் போராட்ட த்தில் ஈடுபட்டவர்கள் எனவும் அன்டனி பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார். (நி)

# சட்டக்கல்வியை ஆங்கிலத்தில் நடத்துவது தொடர்பான வர்த்தமானி தோற்கடிப்பு

(கொழும்பு)

சட்டக் கல்வியை ஆங்கிலத்தில் நடத்துவதற்கான வர்த்தமானி அறி வித்தல் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் முன்வைக்கப்பட்ட போது, அதற்கு பெரும்பான்மையான உறுப்பினர்கள் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இந்த நிலையில், இந்த அறிவிப்புக்கு வாக்கெடுப்பு தேவை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரினார். அதன்படி வாக்கெடுப்பு நடைபெற்றது.

அதில் வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக 113 வாக்குகளும் ஆதரவாக ஒரு வாக்கும் பதிவாகியிருந்தன. பாரா ளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி மட்டும் ஆதரவாக வாக்களித்தார். (நி)

# இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கப்படும்

## ஐரோப்பிய ஒன்றியம் டுவிட்

(கொழும்பு)

இலங்கைக்கான ஆதரவு தொடர் ந்தும் வழங்கப்படும் என ஐரோப் பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதரகத்தின் உத்தி யோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான கடனை சர்வ தேச நாணய நிதியம் அங்கீகரி த்தமையை வரவேற்றுள்ள ஐரோ ப்பிய ஒன்றியம் கடன் மறுசீர மைப்பு,திறந்த சந்தைகள், நிதி ஒத்துழைப்பு மற்றும், சீர்திருத் தங்கள் ஆகியவற்றினை விரை வாக அடைவதற்கான முயற்சிகளின் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கப் படும் என அறிவித்துள்ளது. (நி)


# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 1976 - 07 - 17



இறப்பு 2023 - 03 - 17

அமரர்.சின்னத்துரை சிவசெல்வனேசன்

வரணி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினரும் யாழ். மத்திய கல்லூரியின் ஆசிரியருமான திரு. சி.சிவச்சந்திரன் அவர்களின் அன்புச் சகோதரர் அமரர்.சின்னத்துரை சிவசெல்வனேசன் அவர்களின் திடீர் மறைவினால் பெரும் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், பெற்றோர், உடன்பிறந்தோர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடையவும் அம்பாளைப் பிரார்த்தனை செய்கின்றோம். (4984)

பழைய மாணவர் சங்கம்-யா/வரணி மத்திய கல்லூரி.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்தியா - அவுஸ்திரேலியா இறுதி ஒருநாள் போட்டி இன்று



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் மோதும் 3 ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி இன்று புதன் கிழமை சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் விளையாடுவதற்காக இந்தியா, அவுஸ்திரேலியா வீரர்கள் நேற்று முன்தினம் மாலை சென்னை வந்தனர்.

இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணி ஒரு நாள் தொடரை கைப்பற்றும். ஒரு நாள் தொடரை வெல்வது இந்தியாவா? அவுஸ்திரேலியாவா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. இரு அணிகளும் சமபலத்துடன் மோதுவதால் போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருக்கும்.

2 ஆவது போட்டியில் இந்திய அணியின் பட்டிங் மிகவும் மோசமாக இருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சேப்பாக்கத்தில் இந்திய பட்ஸ்மேன்கள் அதிரடியாக விளையாட வேண்டும். இன்றைய போட்டிக்கான இந்திய அணியில் மாற்றம் இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணியை பொறுத்தவரை பந்து வீச்சில் வலுவாக திகழ்கிறது. கடந்த ஆட்டத்தில் ஸ்டார்க் 5 விக்கெட் வீழ்த்தி இந்திய பட்ஸ்மேன்களுக்கு நெருக்கடி கொடுத்தார்.

இதேபோல ஆடம் சம்பா, அபோட் ஆகியோரும் நல்ல நிலையில் உள்ளனர். டிரெவிஸ் ஹெட், மிச்சேல் மார்ஷ் கடந்த ஆட்டத்தில் சிறப்பாக பட்டிங் செய்தனர். இதே போல கப்டன் ஸ்டீவ் சுமித்தும் வார்னரும் நல்ல நிலையில் இருக்கிறார்கள்.

டெஸ்ட் தொடரை இழந்த அவுஸ்திரேலிய அணி ஒரு நாள் தொடரையாவது கைப்பற்றி விட வேண்டும் என்ற வேட்டையில் உள்ளது. அதே நேரத்தில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி டெஸ்ட்டை போலவே ஒருநாள்தொடரையும்வென்று விட வேண்டும் என்ற ஆர்வத்தில் இருக்கிறது. சேப்பாக்கம் மைதானத்தில் சுமார் 4 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் போட்டி நடைபெறுகிறது. இதனால் இரசிகர்கள் மிகுந்த ஆவலுடன் இந்தப் போட்டியை எதிர்நோக்கி உள்ளனர். அவர்கள் கிரிக்கெட் கோலாகலத்துக்கு தயாராக உள்ளனர். இந்தப் போட்டிக்கான டிக்கெட்டுகள் அனைத்தும் விற்று தீர்ந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஸ்டேடியம் நிரம்பி வழியும் என்று கருதப்படுகிறது. தங்களது அபிமான வீரர்களின் ஆட்டத்தை நேரில் காணும் குதூகலத்தில் இரசிகர்கள் ஆவலுடன் உள்ளனர். (4)

## திவாலான...

எனவே இனிமேல் வழமையான கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பிக்கும் திறன் எமக்கு கிடைத்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான அங்கீகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று விடுத்துள்ள விசேட உரையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் நாட்டின் அந்நியச் செலாவணியை, அதிகரித்துக் கொள்வதுடன், அத்தியாவசியப் பொருட்கள், மருந்துகள் மற்றும் சுற்றுலாவுக்குத் தேவையான பொருட்கள் மீதான இறக்குமதித் தடைகளை அரசாங்கம் படிப்படியாக நீக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கைக்கு ஆதரவளித்த அனைத்து நாடுகளுக்கும், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் இரு தலைவர்களுக்கும் இலங்கை மக்கள் சார்பாக தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இனிமேல் இந்த உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அது தொடர்பான உடன்படிக்கை இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (4-7)

## பாடப் புத்தகங்.

லிபிடி மத்திய கல்லூரி, கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி, வவு/ஓமந்தை மத்திய கல்லூரி, மன்/முருங்கன் மத்திய கல்லூரி, மன்/கட்டையடம்பன் றோ.க.த.க பாடசாலை, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யா/இணுவில் இந்துக் கல்லூரி, மு/மாங்குளம் மகா வித்தியாலயம், கிளி/தர்மபுரம் இல.01 அ.த.க.பாடசாலை, வவு/சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, மு/இரணைப்பாலை றோ.க.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளில் இந்நிகழ்வு இடம்பெறும். (4-7)


## பயங்கரவாத...

சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பெயரில், கைது செய்யப்பட்டு எந்தவித குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படாமல் வழக்கு தொடரப்பட்ட நிலையில் சிரேஷ்ட வழக்கறிஞர் ரத்தினவேலின் மேற்பார்வையில் வழக்கறிஞர் கணேஸ்வரனால் வாதாடப்பட்ட இந்த வழக்கில் ஐந்து வருடங்களின் பின்னர்11 சந்தேக நபர்களில் 9 சந்தேக நபர்கள் இன்று விடுதலை செய்யப்பட்டனர். மிகுதி இரண்டு பேர் மேலதிக விசாரணைக்காக முழுமையாக விடுவிக்கப்படாமல் உள்ளனர் . (4-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2551

### சதுர்சன்

உங்க தட்டுக்கு தோசை வந்தா...
அம்மா சுடுராங்கனு அர்த்தம்!
நீங்களே தட்டோட கிச்சனுக்கு போனால்
மனைவி சுடுராங்கனு அர்த்தம்!



அதே பொண்டாட்டி தோசைன்னு கேட்டா அங்க
தோசை சுடுறதே புருசங்காரன்னு அர்த்தம்.

### கபினா

நேர்மையாக இருப்பவர்களுக்கு
கோபம் அதிகமாக வரும்....
காரணம் அவர்களுக்கு
ஏமாற்றங்களை தாங்கும் சக்தி
இருப்பதில்லை.....!

### கஸ்தூரன்

மனைவி: எனக்கு உங்க கூட நூறு
வருஷம் வாழனும்
கணவன்: இல்ல! எனக்கு இது உருட்டா
இருக்குமோன்னு பயமா இருக்கு
மனைவி: ஆமா உருட்டுன்னா என்னா?
கணவன்: அய்யோ எப்படி வளத்துருக்காங்க...!



### தனுசன்

பிரச்சினை என்று
யாரிடமும் போய்
நிற்காதே...
"ஆறுதல் சொல்பவர்கள் சிலர்"
"ஆனந்தப் படுபவர்கள் சிலர்"
"அவனுக்கு வேணும் டா"
என்று முதுகுக்கு
பின்னால் பேசுபவர்கள்
பலர்.....

### கேதாரன்



என்னடா ஒரு Message கூட
படிக்கவே முடியல



அண்ணே இவங்க ரெண்டு பேரும்
டாக்டர் அதான் கையெழுத்து புரியல

### சுரேஜிதா

பெற்றோர்கள் மனம் வெறுத்து
சாபமிடாத வாழ்க்கையை
வாழ்ந்து விட வேண்டும்
இறுதிவரை....!!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி மீண்டும் குறைந்தது

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மீண்டும் வலுவடைந்துள்ளதை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று வீதம் மூலம் அறிய முடிகிறது.

அதன்படி, நேற்றைய தினம் அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 316 ரூபாய் 84 சதமாகவும் விற்பனை பெறுமதி 334 ரூபாய் 93 சதமாகவும் பதிவாகியுள்ளது.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் இருந்து அமெரிக்க டொலர் மற்றும் ஏனைய முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பு உயர்ந்து வந்திருந்த போதிலும், கடந்த வாரம் மீண்டும் வீழ்ச்சியை சந்தித்திருந்தது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 331 ரூபாய் 71 சதமாகவும் விற்பனை பெறுமதி 349 ரூபாய் 87 சதமாகவும் காணப்பட்டது. (நி)

# இறுதித் தீர்மானத்தை எட்ட கூடுகிறது தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழு நாளை கூடவுள்ளதாக அதன் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியுமா, இல்லையா? என்பது தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எட்டுவதற்காக குறித்த ஆணைக்குழு கூடவுள்ளது.

இதற்காக சகல அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (நி)


# யா/ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயம்

## தரம்-5 புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு-2022


ஆ.வானுஜா-156


சோ.தன்ஷிகா-154


பா.அம்சுவி-154


து.ரசிகலா-153


ர.கிம்ஷிகா-151


சு.சங்கவி-146


தி.துவர்ணிகன்-146


ப.நிருஷனா-145



எமது பாடசாலையில் இருந்து 58 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 55 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 95 % சித்தியடைந்துள்ளனர்.

எமது மாணவச் செல்வங்களை நெறிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அதிபர் திரு.யோ.ஜெகஆனந்தம் அவர்களையும் ஆசிரியர்கள் திரு.இ. தோமஸ் அல்வின், திருமதி. சா. ஸ்ரீகுமார் அவர்களையும் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

க.கஜேந்திரன்-142, சி.தார்மீகன்-140, சி.மிதுஷாலினி-140, க.யஸ்விஹா-139, ம.தருண்-139, சி.ஸ்ரீஅக்சயா-139, வ.வருணிசன்-139, ச.சஜானா-137, தி.கபிஷாலினி-136, மோ.ரஜிஸ்கா-133, ஞா.ஏஞ்சலினா-132, பி.யதுஷாயினி-131, ர.அஸ்வின்-128, ஸ்ரீ.மதுஷாளினி-128, சு.ஜெஸ்மினி-128, ஜெ.துவாரகா-127, பி.தைஷன்-125, மொ.ச.பாத்திமா நிஸ்ரா-125, பா.மகிஷா-123, ம.சாய்சங்கா-121, ற.பிரவீன்-121, ஈ.மதுஷியா-121, ர.சானுஜா-121, வ.லுஜிஷன்-119, சு.டிஷான்-119, ச.மனீஷா-118, கா.பானுசா-116, ர.தீபிகா-112, த.மாதங்கி-112, வி.பார்த்தீபன்-107, தி.திலக்ஷிகா-105, ல.டினுஷாந்-103, சு.வர்சயா-103

(14983)

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம், யா/ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயம்.


# இராசிபலன்

22.03.2023
பங்குனி 08, புதன்கிழமை
பிரதமை முன்னிரவு- 10.24 மணிவரை

உத்திரட்டாதி பிற்பகல் 5.13 மணிவரை
சுபநேரம் -4.47-6.17 மணிவரை
இராகுகாலம்-12.17-1.47 மணிவரை

சந்திராஷ்டமம் - மகம், பூரம்

**வளவன்**


மேஷம்

தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், கொடுக்கல் -வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கடகம்

புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல்நலன் சீராகும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


துலாம்

எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், பொது வழியில் புகழ் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு.


மகரம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


சிம்மம்

நடப்பதெல்லாம் நன்மைக்கென நினைக்க வேண்டிய நாள், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியங்களை பாதியில் விட்டுவிடுவீர்கள்.


விருச்சிகம்

தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.


கும்பம்

குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு.


மிதுனம்

நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.


கன்னி

பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பொறுமையால் பெருமை காணும் நாள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.


தனுசு

பெற்றோர் மீது பிரியம் கூடும், உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள்.


மீனம்

நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், திடீர் பயணங்களால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

செய்யும் அரிய தொழிலே நமக்கு அழியாப் புகழைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார் -டிப்பர் விபத்து
## டிப்பர் சாரதி தப்பியோட்டம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அரசடிச் சந்திப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கி ழமை மதியம் காருடன் டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள் ளாகியுள்ளது.

இதன்போது எவருக்கும் உயிராபத்துக்கள் ஏற்படாத போதிலும் கார் கடுமையாகவும் டிப்பர் வாகனம் பகுதிய ளவிலும் சேதமடைந்துள்ளன. விபத்தினை ஏற்படுத்திய டிப்பர் வாகன சாரதி தப்பித்துள்ள நிலையில் சாவகச்சேரிப் பொலி ஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின் றனர். (4-6-30)



யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டு விழா-2023, வித்தியாசாலையின் அதிபர் திருமதி.சைலினி பிரதீபன் தலைமையில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றது.

# சாவகச்சேரி ப.நோ.கூ.ச இரு கிளைகள் மீள திறப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய பணிப்பாளர் சபையினரால் சங்க எல்லைக்குள் மூடப்பட்ட நிலையில் காணப்பட்ட இரண்டு கிளைகளை மீளத் திறந்தி ருப்பதாக பணிப்பாளர் சபையி னர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத் தின் கூட்டுறவு தின நிகழ்வின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்து தெரிவிக்கை யில் எமது பணிப்பாளர் சபை நுகர்ச்சிப் பகுதியை விரிவுபடுத் தும் நோக்கில் மூடப்பட்டிருந்த இரண்டு சங்கக் கிளைகளை மீள ஆரம்பித்து வைத்துள்ளது.

அத்துடன் புதிய ஆளணி களை உருவாக்கிக் கொடுத் துள்ளோம். கூட்டுறவுச் சங்கங் களின் பிரதான நோக்கம் நலி வுற்ற பொருளாதார சிக்கலில் உள்ளவர்களை மேம்படுத் துவது.அதன் அடிப்படையில் சங்கத்தின் ஊழியர்கள் தொகை யையும் அதிகரித்துள்ளோம்.

இதனை விட கல்வி ஊக்கு விப்பு, மாணவர்களுக்கான சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவி த்தல் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்களை முன் னெடுத்து வருவதாக மேலும் அவர்கள் இதன்போது தெரிவி த்தனர். (4-6-30)



159 வருட பொலிஸ் வீரர் தினம் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. கடமையின்போது உயிரிழந்த பொலிஸ் உத்தி யோகத்தர்களை நினைவுகூரும் வகையில் குறித்த நிகழ்வு யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமையகத்தில் நேற்று செவ் வாய்க்கிழமை இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்,கஜிந்தன்)

# மந்திரிமனை புனரமைப்பு விரைவில் ஆரம்பிக்கப்படும்

## பேராசிரியர் புஸ்பரட்ணம்

(யாழ்ப்பாணம்)

சங்கிலியன் தோரண வாயில் வேலைகள் இரண்டு வார கால பகுதிக்குள் முடி வடைந்து விடும். அதன் பின்னர் மந்திரிமனை மீள் உருவாக்க செயற்பாடுகளை ஆரம்பிக்க உள்ளோம். அதற்கான நிதியுதவிகளை மக்களிடம் கோருகிறோம் என தொல்லியல் துறையின் சிரே ஷ்ட பேராசிரியர்பரமு.புஷ்பரட் ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பருத்தித் துறை வீதியில் சட்டநாதர் ஆலயத்திற்கு அருகில் உள்ள மந்திரிமனை வளாகத்தினுள் உள்நுழைய தடை விதிக் கப்பட்டுள்ள நிலையில் ,அது தொடர்பில் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கு விளக்கம் கொடுக்கும் முகமா கவே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், 2010 ஆம் ஆண்டு பிராந் திய தொல்லியல் திணைக் களம் ஒன்று உருவாக்கப்பட் டது. குறித்த திணைக்களத்தின் ஆலோசகராக பதவியாற்றி இரு க்கின்றேன்.அதனால் குறித்த விடயம் தொடர்பில் நான் சில கருத்துக்களை கூறலாம் என நினைக்கிறேன்.

யாழ்ப்பாணத்தில் 86 இடங்கள் மரவுரிமை இடங்க ளாக பிரகடனப்படுத்தப்பட்டு ள்ளன. அதில் முதலாவதாக மந்திரிமனை, சங்கிலியன் தோரண வாசல், ஜமுனா ஏரி மற்றும் சங்கிலியன் அரண் மனை ஆகிய இடங்கள் பிரக டனப்படுத்தப்பட்டு அவற்றுக் கான பெயர்ப்பலகையும்அங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அவை வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டுள்ளன. தொல் லியல் திணைக்களம் மரபு ரிமை இடங்களாக அடையா ளப்படுத்தி அதனை வர்த்த மானியில் பிரசுரம் செய்தால் நில உரிமையாளர் அங்கு புதிதாக எதையும் மாற்றி அமை க்க முடியாது. அதே சமயத்தில் தொல்லியல் திணைக்களமும் நில உரிமையாளரின் அனு மதியின்றி எந்த நடவடிக்கை யினையும் மேற்கொள்ளாது.

இப்பொழுது நில உரிமை யாளர் எங்களுக்கு நிலத்தைத் தருவதற்கு முழுமையான ஒப்புதல் அளித்திருக்கின்றார். நாங்கள் தொல்லியல் திணை க்களத்தின் அனுமதியுடன் மீள் உருவாக்கம் செய்வதற்கான திட்டங்கள் எல்லாம் கொடு க்கப்பட்டு அவை தொல்லியல் திணைக்களத்தினாலும் அங் கீகரிக்கப்பட்டுள்ளன. எனவே சங்கிலியன் தோரண வாசல் வேலைகள் பூர்த்தி அடைந்த தன் பின்னர் மந்திரிமனை யின் பணிகள் ஆரம்பிக்கப்படும். அதனை மேற்கொள்வதற்கு இன்று மக்கள் மத்தியில் அதி ருப்தி நிலையில் இருக்கிற வர்களும் பெரும் பங்களிப்புச் செய்ய வேண்டும்.ஐந்து பேர் நினைத்த உடனே இதை செய்து கொள்ள முடியாது பல மில்லியன் கணக்கான பணம் அவற்றை மீள உருவாக்கு வதற்கு எங்களுக்கு தேவை. நாங்கள் அந்த பணியை தொட ங்குகின்ற பொழுது ஊடகங்கள் ஊடாகவும் அதிருப்தி நிலை யில் உள்ள மக்களிடமும் அவ ற்றை மீள் உருவாக்கம் செய் வதற்கு நிதி உதவி செய்யுமாறு வேண்டுகோள் விடுப்போம். அவ்வாறு செய்கின்ற பொழுது அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்ய முடியும் என்பது தான் உண்மையான நிலை ப்பாடு எனத் தெரிவித் தார். (4-6-33)

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய கொடியேற்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநா யகர் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் ஏப்ரல் மாதம் புதுவருடப் பிறப்பு தினமான 14 ஆம் திகதி வெள் ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறவுள்ளன. (4)

# ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய் யப்பட்ட துவிச்சக்கர வண்டி கள்.தொலைபேசிகள் மற்றும் இதர பொருட்கள் என்பன நீதி மன்ற வளாகத்தில் வைத்து எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளன.

குறித்த பகிரங்க ஏலத்தில் துவிச்சக்கர வண்டிகள், தொலைபேசிகள் மற்றும் இதர பொருட்கள் கொள்வனவு செய்ய வர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண டும்.காசோலை ஏற்றுக் கொள் ளப்படமாட்டாது. தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுக மளிக்க வேண்டும். அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் பொருட்களை அன் றைய தினமே உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என நீதிமன்ற நீதிவான் அறிவித்துள்ளார்.(4)

# சக்தி கணபதி சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண். வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சக்தி கணபதி சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகம், மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்ட பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார் என பிரதமகுரு சிவ ஸ்ரீ சு.விவேகானந்தக் குரு க்கள் அறிவித்துள்ளார். (4-6)

# நலவாழ்வு மையம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யா/மானிப்பாய் இந்துக் கல் லூரியின் 1979 இல் கல்வி கற்ற உயர்தர மாணவர்களின் அனுச ரணையுடன் சதுரங்க கழகம், உடற் பயிற்சிக் கழகம், விவசாய ஊக்கு விப்பு, தொழிற்பட்டறைக்கான நிபுணர் சேவை, பேச்சுத்திறன் விருத்தி ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மாண வர் சமூகத்தை கட்டியெழுப்பும் முகமாக நாளை காலை 8.30 மணி க்கு நலவாழ்வு மையம் அங்குரா ர்ப்பணம் செய்து வைக்கப்படவுள் ளது என பாடசாலை அதிபர் செ.இளங்கோ அறிவித்துள்ளார்.(4)

# பரிசுத் தினம்

(யாழ்ப்பாணம்)

யா/ ஆனைப்பந்தி மெதடி ஸ்ற் மிஷன் வித்தியாலய பரி சுத்தினம் நிகழ்வு இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாட சாலை அதிபர் யோ.ஜெகஆனந்தம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பழைய மாணவரும் இலங்கை வங்கியின் நிறை வேற்று உத்தியோகத்தருமான ... பிரதம விருந்தினராக கலந்து கொள்ள வுள்ளார். (4)



சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழகத்தினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் இடைவினைக் கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்க ப்பட்டுள்ளது.குறித்த நிகழ்வில் சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழக அங்கத்தவர்கள்,பாடசாலையின் அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். (படம்-சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகிறோம்

### சேவைநலன் பாராட்டு

திருமதி. மீனலோஜினி சுப்பிரமணியத்தின் மணிவிழா மலருக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். பாடத்தின் எந்தப் பகுதியைக் கற்பிப்பதென்றாலும் அதற்கான முழுமையான முன் ஆயத்தம். மாணவர்களைத் தன்பிள்ளைகள் போலவே அரவணைத்து வழிகாட்டும் திறன். மாணவரின் குடும்பங்கள் பற்றிய முழுமையான தகவல்களைப் பேணி வழிப்படுத்துவதனால் மாணவர்களால் மிகவும் மதிக்கப்படும் ஆசிரியராக அவர் விளங்கினார்.

ஆசிரியராகக் கடமையாற்றிய போதும் அவரது கற்றல் ஆற்றல் சிறிதும் குறைவடையவில்லை.பின்னர் அதிபராகக் கடமையாற்றிய போதும் அவரது ஆற்றலையும் ஆளுமையையும் சிறப்பாக வெளிப்படுத்தினார். யா/ இளவாலை றோ.க.த ஆண்கள் பாடசாலையிலும் பின்னர் யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையிலும் அவர் ஆற்றிய பணிகளை அப்பாடசாலைகள் என்றும் நினைவில் வைத்திருக்கும்.

திருமதி. மீனலோஜினி சுப்பிரமணியம் தனது ஓய்வுக் காலத்திலும் மகிழ்ச்சிகரமான வாழ்வைத் தொடர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பொ.ரவிச்சந்திரன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்.**

### மணிவிழா நாயகிக்கு வாழ்த்து

மனதில் உறுதியும் வாக்கினில் இனிமையும் நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் சீர்பெற்ற ஞானமும் பார் போற்றும் ஒழுக்கமும் கொண்ட எமது பாடசாலையின் அதிபரும் மணிவிழா நாயகியுமாகிய திருமதி. மீனலோஜினி சுப்பிரமணியம் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

"ஆசிரியப் பணியே அறப்பணி அதற்கே உன்னை அர்ப்பணி" என்பதைத் தனது தாரக மந்திரமாகக் கொண்டு கற்பித்தல் கலையில் என்றும் ஒளிவளர் விளக்காய் சிந்தனைத் தூய்மையோடு அரசியல், விவசாயம், தமிழ்மொழி ஆகிய பாடங்களைக் கற்பித்துப் பல மாணவர்கள் சமூகத்தில் உயர்நிலை பெற ஏணியாக விளங்கியவர். ஆசிரியர், கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்,அதிபர் எனப் பல பரிமாணங்களில் பதவிகளை வகித்த சிறந்த கல்வியியலாளர் இவர்.

பாசத்தையும் நேசத்தையும் தன் சுவாசத்திலே கலந்து தவறுகளைத் தவறாது சுட்டிக்காட்டி சிறந்த நிர்வாகத் திறனும் ஆளுமைப் பண்பும் மிக்க அதிபராகத் திகழ்ந்து பல வரலாற்றுத் தடங்களைப் பதித்த எமது பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் பல வரலாற்றுச் சுவடுகளை ஏற்படுத்திய வண்ணம் பாடசாலையை முன்னேற்றப் பாதையில் நகர்த்திச் சென்றுள்ளார்.

**திருமதி.சைலினி பிரதீபன்,( SLPS - 3) அதிபர்,**
**யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.**



திருமதி. **மீனலோஜினி சுப்பிரமணியம்**
SLPS I (Trd (Agr), B.A,PGDE (GOLD Medal)
MED,DSM)
அதிபர், யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

சேவை விபரம்
22.03.1990-06.05.1992
யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி - ஆசிரியர்.
07.05.1992-06.07.1993
யா/ஆனைக்கோட்டை R.C.T.M.S- ஆசிரியர்
07.07.1993-14.05.1996,
யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி- ஆசிரியர்
15.05.1996-31.01.1997
மு/ விசுவமடு ம.வி.- ஆசிரியர்
01.02.1997-25.04.2000
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி -ஆசிரியர்
26.04.2000-20.03.2001
யா/ தேசிய கல்வியியற் கல்லூரி- விரிவுரையாளர்
21.03.2001- 25.11.2012
யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி -ஆசிரியர்
26.11.2012-26.03.2019
யா/இளவாலை R.C.T.M.S ஆண்கள் பாடசாலை-அதிபர்
27.03.2019-31.12.2022
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை -அதிபர்
தேசியக் கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா
கற்கை நெறியின் யாழ்ப்பாணப் பிராந்திய
நிலைய விரிவுரையாளர்

### மீனலோஜினி பெருந்தகை வாழி!

மீனலோஜினி சுப்பிரமணியம் ஆசிரியராக, அதிபராக, விரிவுரையாளராக எனும் பன்முகங்கள் கொண்டவர். இவர் தனது மொத்த சேவைக் காலத்திலும் கற்பதை நிறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 90'களில் தனது கற்பித்தல் பணியைத் தொடங்கும் போது ஆசிரியப் பணிக்காக புத்தகம் தூக்குவது அவருக்குக் கடினமாயிருக்கவில்லை.

அதேநேரம் மீனலோஜினி அவர்கள் தனது அதிபர் சேவைக் காலத்தில் NIE இன் பகுதி நேர டிப்ளோமா விரிவுரையாளராகவும் பணியாற்றி வந்த காரணங்களால் கற்றல் பணியைப் புறம்தள்ளாத ஒருவர் என இனம்காண முடிந்தது. இதுவே அவரது வெற்றியின் இரகசியம்.

இவர் தம் ஓய்வுக் காலத்தில் எல்லா நலன்களும் பெற்று சீரும் சிறப்புடனும் தன் குடும்பத்தோடும் பிள்ளைகளோடும் ஆரோக்கியமாகவும் சந்தோசத்தோடும் நீடூழி வாழ்க என வாழ்த்தி அமைகின்றேன்.

**மோகநாதன் செல்லையா,**
**ஓய்வுநிலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**உடுவில்.**

### மணிவிழா நாயகியை வாழ்த்துகிறோம்.

அதிபர் எமது பாடசாலையில் 2019.03.27 தொடக்கம் ஓய்வு பெறும் வரை தன் பணியை பல சவால்களுக்கு மத்தியிலும் செயற்திறன் மிக்கதாக ஆற்றியு ள்ளார். இக்காலப் பகுதியில் பாடசாலை அபிவிருத்தி தொடர்பாகவும் மாணவர்களின் கல்வி மேம்பாடு தொடர்பாகவும் ஆசிரியர்களுடன் இணைந்து அரும்பாடுபட்டு 2020, 2021 G.C.E (O/L) சிறந்த பெறுபேறுகளை( 9A, 8A,B) மாணவர்கள் பெறுவதற்கு வழிகாட்டியுள்ளார்.

அவரின் ஓய்வுக் காலத்தில் தன் குடும்பத்தினருடன் உடல், உள ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ வேண்டும் என்று ஆசிரியர் நல்லுறவுக் கழகம் சார்பாக மணிவிழா நாயகியை வாழ்த்துவதில் பேருவகை அடைவதோடு இறைவனையும் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்."

**திரு.மு. நடராசா,**
**தலைவர், ஆசிரியர் நல்லுறவுக் கழகம்,**
**யா/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை.**

அதிபரே ஆன போதும்
அதிகாரம் கொண்டாயில்லை
மதித்துமே மற்றோர் மாண்பை
மதிநலம் காத்தாய் நின்னைக்
கொதித்துமே கோபம் கொண்டு
ஒருநாளும் பார்த்தோமில்லை
விதித்துமே அன்பால் எம்மை
இயக்கினாய் வாழி வாழி.

(14974)

**வாழ்த்துவோர்- ஆசிரியர், நல்லுறவுக் கழகம்,**
**யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.**

# உலக நீர் தினம்

நிலம்,நீர்,நெருப்பு,காற்று,ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களின் கூட்டுச்சேர்க்கையால் இப்பிரபஞ்சம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிலும் நீரின்றி உலகில் எந்த உயிரும் இயங்காது. "நீரின்றி அமையாது உலகு" என்று நீரின் முக்கியத்துவத்தை திருவள்ளுவர் வான் சிறப்பு என்னும் அதிகாரத்தில் சிறப்பித்துக் கூறியுள்ளார். இந்த நூற்றாண்டில் உலக நாடுகளுக்கு இடையேயும் மனித சமுதாயத்திற்குள்ளேயும் பிளவை ஏற்படுத்தப் போவது நீர் என்பதே நிதர்சனமான உண்மை.

மனித சமுதாயத்திற்குக் கிடைத்த, விலை மதிப்பில்லாத, இயற்கை வளமான நீர் தனி மனித சொத்து அல்ல. அது ஒட்டுமொத்த மனித சமுதாயம் மட்டுமில்லாது அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவான சொத்து என்ற கருத்தினை இன்றைய உலக நீர் தினத்தில் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் இவ்வாறான இயற்கை வளங்களை நாமும் பயன்படுத்தி வருங்கால சந்ததியினருக்கும் மாசுபடாமல் விட்டுச் செல்ல வேண்டும் என்று உறுதி கொள்ள வேண்டும்.




புவி மேற்பரப்பின் முக்கால் பங்கு பிரதேசத்தினைக் கொண்டு நீர் காணப்படுகின்ற போதிலும் உலக நீர்ப்பரப்பில் 97.5% உவர் நீராகவும் 2.5% நன்னீராகவும் உள்ளது. நன்னீர்ப் பரப்பில் 68.6% பனிக்கட்டியால் மூடப்பட்ட பிரதேசமாகவும் 30.1% நிலக்கீழ் நீராகவும் மற்றும் 1.3 % ஏனைய மேற்பரப்பு நன்னீர் பிரதேசங்களாகவும் அமைந்துள்ளன. பூமியில் கிடைக்கக்கூடிய நன்னீரில் 0.014% மட்டுமே மனிதன் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. இதன் அளவும் தற்சமயம் குறைந்து வருகின்றது என்பது தான் அதிர்ச்சிக்குரிய விடயம். இதனால் தான் நீரை அடிப்படை உரிமையாக்கி உள்ளனர்.

நம் உணவில் உள்ள சத்துத் தாதுக்களை தேவையான உறுப்புகளுக்கு எடுத்துச் செல்லவும் கழிவுகளை வெளியேற்றவும் நீர் அவசியமாகும். ஒரு மனிதனின் உடலில் சராசரியாக 42 லீற்றர் தண்ணீர் உள்ளது. அதில் 2.7 லீற்றர் என்னும் மிகச் சிறிய அளவு குறைந்தாலும் உடலில் அசாதாரண நிலை ஏற்படும். உயிரற்ற பொருட்களின் தூய்மையைப் பேணவும் உயிருள்ள அனைத்து ஜீவன்களினதும் இயக்கத்துக்கும் ஆதாரம் நீரே ஆகும்.

பூமியின் நிலப்பரப்பில் 75% நீர் கொண்டிருப்பினும் உலக சனத்தொகையின் ஒவ்வொரு நான்கு பேரிலும் மூவர் அருந்துவதற்கு,தூய நீரின்றி அவதிப்படுகின்றனர். எமது நாட்டின் 25 மாவட்டங்களுள் 14 மாவட்டங்களில் வாழும் மொத்த சனத்தொகையின் 33 சதவீதமானவர்களுக்கு தூய குடிநீர் கிடைப்பதில்லை.மழைநீர் சேமிப்புக்களுக்காகப் பல்வேறு இடங்களில் பெரும் நிதி செலவில் அமைக்கப்பட்ட மழைநீர் சேமிப்புத் தொகுதிகளில் பல இன்றும் பயன்படுத்தப்படாமல் காட்சிப் பொருளாகவே உள்ளன. இவற்றினை சரியாக பயன்படுத்தக் கூடிய சமூக மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

முன்னொரு காலத்தில் குடிநீர் வசதிகளை வீதியோரங்களில் ஏற்படுத்தி அதன் மூலம் உயிரினங்களுக்கு"தாகசாந்தி" வழங்கி நிறைவுற்ற நாம், இப்போது அனைத்து கனிமங்களும் நீக்கப்பட்ட குடிநீரை போத்தலில் அடைத்து வியாபாரப் பொருளாக மாற்றி அதற்கே அடிமையானதால் உடல் ஆரோக்கியமற்றவர்களாக வாழ்கின்றோம்.

ஆண்டுதோறும் நீருக்கான தேவை அதிகரித்துச் செல்கின்றன. எனவே அரிதாக உள்ள வளத்தை மக்கள் தற்போது எவ்வாறு பாவிக்கின்றார்கள் என்பதைப் பொறுத்தே எதிர்கால மக்களின் வாழ்வு அமையுமென குறிப்பிடப்படுகின்றது. நீர் தீர்ந்து போகின்ற ஒரு வளம் என்பது பற்றிய உலகளாவிய விழிப்புணர்வு தற்போது ஏற்பட்டுள்ளது. ரியோ - டப்ளின் மகா நாட்டுக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்ட நீர்வள முகாமைத்துவம் தொடர்பாக சர்வதேச நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டன.

எமது பிராந்தியத்திலும் நீருக்காக பிரதேசத்திற்குப் பிரதேசம் முரண்பாடுகள் தோன்றுவதை நடைமுறை வாழ்க்கையில் கண்டுகொள்ள முடிகின்றது. இலங்கையின் ஈழத்தமிழர்களின் இறுதி அழிவுகளின் தொடக்கத்திற்கு மாவிலாற்று நீர்தான் காரணமாக இருந்தது. அத்தோடு எதிர்காலத்தில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தால் அல்லது அவை நீர்த்துப் போனால் நீரை அடிப்படையாகக் கொண்ட பிரதேசவாதப் பிரச்சினைகளை உருவாக்கி இந்தியாவைத் தழுவி அரசியல் செய்வார்கள் என்பதை கட்டியம் கூறும் வகையில் உள்நாட்டுப் போருக்குப் பின்பு இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட நீர் விநியோகத் திட்டங்களுக்கான முயற்சிகளின் போது நடைபெற்ற நிகழ்வுகள் கட்டியம்கூறி நின்றன என்பது நினைவுகூரத்தக்கது.

பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனீரோ நகரில் 1992 ஆம் ஆண்டு நடைபெற்ற சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மகாநாட்டில் தீர்மானத்திற்கு அமைவாக மார்ச் 22 ஆம் திகதியை உலக நீர் தினமாக ஐ.நா பொதுச் சபை பிரகடனம் செய்தது. கடந்த 30 வருடங்களாக ஆண்டுதோறும் விசேட தொனிப்பொருளுடன் இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு குடிநீர் மற்றும் அடிப்படை சுகாதார பிரச்சினையினை தீர்க்க "மாற்றத்தை துருதப்படுத்தல்"என்ற தொனிப்பொருளில் சர்வதேச நீர் தினம் நினைவு கூரப்படுகின்றது.

இவ்வாண்டு குடிநீருக்கான மாநாடு நியூயோர்க்கில் 22 முதல் 24 மார்ச் 2023 வரை நடைபெறும். எதை மாற்ற வேண்டும் என்று விவாதிப்பதன் மூலம், முன்னெப்போதையும் விட வேகமாக நமது இலக்குகளை அடைய உதவும் ஒரு கூட்டுச்செயல் திட்டத்தை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. நாம் ஒவ்வொருவரும் நமது செயல்களுக்கு பொறுப்பேற்க வேண்டிய நேரம் இது. இதன் விளைவாக, உலகளவில் சுகாதாரத் தரத்தை மேம்படுத்த தேவையான மாற்றங்களைத் துரிதப்படுத்த முடியும். இதைச் செய்வதன் மூலம், உலகில் உள்ள ஒவ் வொரு நபரும் சுத்த மான குடிநீரைப் பெற முடியும் என மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.



**அ.அன்ரன் கமிலஸ்** M.Phil
தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

உலக நீர் தினம் ஆண்டுதோறும் நினைவுகூரப் பட்டால்மட்டும் போதாது. உலகை முன்னேற்றம், சனத்தொகைப் பெருக்கம்,தொழில் நுட்ப வளர்ச்சிக் கேற்ப நீரின் தேவை நாளும் பொழுதும் அதிகரித்து வருகிறது. அதே வேளை தூயநீரின் எல்லை அருகி வருகிறது. நாம் நாமாக நினைக்காத வரையில் நீர்ப் பற்றாக்குறை நீங்குவது சாத்தியமில்லை. எடுக்க எடுக்க ஊறிக் கொண்டிருப்பதற்கு நிலத்தடி நீர் ஒரு அட்சய பாத்திரமல்ல என்பதை நாம் உணர்ந்தாக வேண் டும். நீரின் அருமையைப் பற்றியும் நீரைச் சேமிப்பதன் அவசியத்தைப் பற்றியும் அனைவ ருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது இன்றிய மையாதது. நீர் வளத்தைப் பற்றிய மக்களின் எண்ணங்களில் மாற்றத்தைக் கொண்டு வருவது உடனடியாக தொடங்கப்பட்டு ஒவ்வொருவர் வீட்டிலி ருந்தும் ஆரம்பிக்கப்படவேண்டும்.

இப்புவியிலே முதல் உயிரினம் தோற்றம் பெற்றது நீரில்தான் என்பதே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள விஞ்ஞான கோட்பாடாகும். இருந்தும் கால மாற்றத்தின் காரணமாக புவியிலே உயிரினங்கள் வாழ்வதற்கு சவால் ஏற்படுத்துகின்ற சூழல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. "இயற்கையினை நாம் பாதுகாத்தால் இயற்கை எம்மைப் பாதுகாக்கும்" என்கின்றனர் சூழலியலாளர்கள்: தற்போது உருவாக்கப்பட்டுள்ள மிக நெருக்கடியான சமூக, பொருளாதார சவால்களை எதிர்கொண்டு நிலைபேண் தகு அபிவிருத்தியை மேற்கொள்கின்ற ஒரு சமுதாயமாக நாம் மாற்றம் பெறுகின்ற போது இயற்கையின் அருளான நீரை மாசடைவதிலிருந்து பாதுகாக்க முடியும். சுத்தமற்ற நீரின் மூலம் சுகாதார கேடுகளில் இருந்து பாதுகாப்புப் பெறவும் சுத்தமான நீருக்கான போராட்டத்தில் நிலைத்து நின்று, குடிநீர் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான முன்னோடிகளாக எம்மை நாம் மாற்றிக் கொள்வதன் ஊடாக நீர் வளத்தினைப் பாதுகாத்து வாழ்வுக்கான இருப்பினையும் உறுதிப்படுத்த முடியும். "ஊர் வளம் பெற, பார் வளம் பெற நீர் வளம் காப்போம்" என்று இன்றைய தினத்தில் திடசங்கற்பம் பூணுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 133





முப்பத்தொன்றாம் அத்தியாயம்
"திருடர்! திருடர்!"

விஜயாலய சோழர் முதல், இரண்டாம் பராந்தகராகிய சுந்தர சோழர் வரையில் சோழ மன்னர்களின் உயிர்ச் சித்திரங்களை நம் வீரன் வந்தியத்தேவன் பார்த்து மகிழ்ந்தான். ஆஹா! இவர்களில் ஒவ்வொருவரும் எப்பேர்ப்பட்டவர்கள்? எத்தகைய மஹாவீரர்கள்! உயிரைத் திரணமாக மதித்து எவ்வளவு அரும்பெரும் செயல்களை இயற்றியிருக்கிறார்கள். கதைகளிலும் காவியங்களிலும் கூட இப்படிக் கேட்ட தில்லையே? இத்தகைய மன்னர் பரம்பரையைப் பெற்ற சோழ நாடு பாக்கியம் செய்த நாடு. இன்று அவர்களுடைய ஆட்சியின் கீழ் உள்ள நாடுகள் எல்லாம் பாக்கியம் செய்த நாடுகள் தாம்.

மேற்கூறிய சோழ மன்னர்களின் சரித்திரங்களைச் சித்தரித்த காட்சிகளில் இன்னொரு முக்கியமான அம்சத்தை வந்தியத்தேவன் கவனி த்தான். ஒவ்வொரு சோழ அரச ருக்கும் பழுவூர்ச் சிற்றரசர் வம்சத் தினர் தலை சிறந்த உதவிகள் செய்திருக்கிறார்கள். வீரத் தொண்டு கள் பல புரிந்து வந்திருக்கிறார்கள்.

முத்தரையர் வசத்திலிருந்த தஞ்சைக் கோட்டையை முற்று கையிட்டு முதலில் அந்நகரில் பிரவேசித்தவர் ஒரு பழுவேட்டரையர். இரு கால்களும் இழந்த விஜயாலய சோழன் திருப்புறம்பியம் போர்க்களத்தில் புகுந்து அதி பராக்கிரமச் செயல்களைப் புரிந்தபோது அவனுக்குத் தோள் கொடுத்துத் தூக்கிச் சென்றவர் ஒரு பழுவேட்டரையர். ஆதித்த சோழன் தலையில் கிரீடத்தை வைத்துப் பட்டாபிஷேகம் செய்வித்தவர் ஒரு பழுவேட்டரையர். ஆதித்த சோழன் யானை மீது பாய்ந்து பல்லவ அபராஜிதவர்மனைக் கொன்றபோது ஆதித்தன் பாய்வதற்கு வசதியாக முதுகும் தோளும் கொடுத்தவர் ஒரு பழுவேட்டரையர்.

பராந்தகச் சக்கரவர்த்தி நடத்திய பல போர்களில் முன்னணியில் புலிக் கொடியை எடுத்துச் சென்றவர்கள் பழுவேட்டரையர்கள். இராஜாதித்யன் போர்க்களத்தில் காயம்பட்டு விழும் போது அவனை ஒரு பழுவேட்டரையர் தன் மடியின் மீது போட்டுக் கொண்டு, "இராஷ்டிரகூடப் படைகள் தோற்று ஓடுகின்றன" என்ற செய்தியைத் தெரிவித்தார். அவ்விதமே அரிஞ்சயருக்கும் சுந்தர சோழருக்கும் வீரத் தொண்டுகள் புரிந்து உதவியவர்கள் பழுவேட்டரையர்கள்தாம்.

இதையெல்லாம் சித்திரக் காட்சிகளில் பிரத்யட்சமாகப் பார்த்த வல்லவரையன் சொல்ல முடியாத வியப்பில் ஆழ்ந்தான். அண்ணன், தம்பிகளான பழுவேட்டரையர்கள் இன்று சோழ நாட்டில் இவ்வளவு ஆதிக்கம் வகிப்பதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. சுந்தர சோழர் எந்த விடயத்திற்கும் அவர்களுடைய யோசனையைக் கேட்டு நடப்பதிலும் வியப்பில்லை.

ஆனால், தான் இப்போது பெரிய சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருப்பது என்னவோ நிச்சயம். சின்னப் பழுவேட்டரையருக்குத் தன் பேரில் ஏதோ சந்தேகம் ஜனித்து விட்டது. பெரியவர் வந்து விட்டால் அந்தச் சந்தேகம் ஊர்ஜிதமாகி விடும். முத்திரை மோதிரத்தின் குட்டு வெளியாகிவிடும்.

பிறகு தன்னுடைய கதி அதோ கதிதான்! சின்னப் பழுவேட்டரையரின் நிர்வாகத்திலுள்ள தஞ்சாவூர் பாதாளச் சிறையைப் பற்றி வல்லவரையன் கேள்விப்பட்டிருந்தான். அதில் ஒருவேளை தன்னை அடைத்து விடக்கூடும். பாதாளச் சிறையில் ஒருவனை ஒரு தடவை அடைத்து விட்டால், பிறகு திரும்பி வெளியேறுவது அநேகமாக நடவாத காரியம்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்


## ஒரே அடியில் இருநூறு பேர்

(நேற்றைய தொடர்ச்சி)

நமக்குள் இன்னொரு போட்டி வைத்தால் என்ன? என்று கேட்டான் அவன். என்ன போட்டி? என்று கேட்டது அது.

ஒரு பெரிய பாத்திரத்தில் கஞ்சி வைப்போம். அதில் பாதியை நான் சிறிது கூட மென்று தின்னாமல் அப்படியே குடித்து விடுகிறேன் என்றான் அவன்.

நான் நம்ப மாட்டேன். நீ மென்று தான் தின்றிருப்பாய். நீ மெல்லாமல் விழுங்கி இருந்தால் எப்படிக் கண்டுபிடிப்பது? அதை நான் என் வயிற்றுக்குள் இறங்கியா பார்க்க முடியும்? என்று கேட்டது அது.



உன்னால் பார்க்க முடியும். நான் கஞ்சியைக் குடித்ததும் வயிற்றில் ஒரு பகுதியைக் கிழித்துக் காட்டுகிறேன்.

பிறகு உனக்கே நான் மென்று தின்றேனா இல்லையா என்பது விளங்கும் என்றான் அவன்.

சரி என்ற பூதம் கஞ்சி சமைக்கத் தொடங்கியது.

வேறு அறைக்குச் சென்ற அவன் சாக்குப் பையை எடுத்துத் தன் வயிற்றில் கட்டிக் கொண்டான். அதன் வாய்ப்பகுதி தன் தொண்டைக்கு நேராக இருக்கும்படி வைத்தான். [illegible] இருப்பது தெரியாத வண்ணம் மேலே சட்டையை போட்டுக் கொண்டான்.

பூதம் கஞ்சி வைத்திருந்தது. அதைப் பாத்திரத்தோடு எடுத்தான் அவன். தன் தொண்டைக்கு அருகே இருந்த பைக்குள் அதைச் சிறிது சிறிதாக ஊற்றினான். குடிப்பது போல நடித்தான்.

சூழ்ச்சியை அறியாத பூதம் அவன் குடிப்பதாகவே நினைத்தது.

பூதத்தைப் பார்த்து அவன், நான் கஞ்சியை எப்படிக் குடித்து இருக்கிறேன் என்று பார். சிறிது கூட மெல்லவில்லை. அப்படியே அரிசிச் சோறு இருக்கும் என்று சொல்லிக் கொண்டே கத்தியால் தன் வயிற்றைக் கிழித்தான். உண்மையில் அவன் கிழித்தது வயிற்றுக்குள் கட்டப்பட்டிருந்த சாக்கையே.

அவன் வயிற்றிலிருந்து கொண்டிய கஞ்சியைப் பூதம் பார்த்தது.

உன்னைப் போல நானும் செய்கிறேன், என்ற அது. இன்னொரு பாத்திரத்தில் இருந்த கஞ்சியை அப்படியே குடித்தது.

நான் எதையும் மெல்லவில்லை. அப்படியே குடித்து இருக்கிறேன் பார், என்று சொல்லிக் கொண்டே தன் வயிற்றைக் கத்தியால் கிழித்தது அது.

குருதி கொட்ட குடல் வெளியே வந்து துடிதுடித்து அங்கேயே இறந்தது அது.

வெற்றி வீரனாகத் திரும்பிய அவனுக்கும் இளவரசிக்கும் ஒரு நல்ல நாளில் திருமணம் நடந்தது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரியஒளி போன்றது அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.

~ மில்டன்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## ஐ.எம்.எப் வழங்கிய உறுதிமொழி மீண்டும் சண்டிக்கட்டுக்கு...

சண்டிக்கட்டு என்பது நம் கிராமத்து மொழி நடை.

சண்டியன்கட்டு என்பதே பேச்சுமொழியில் சண்டிக்கட்டு என்றாயிற்று.

வேட்டியை அல்லது சாரத்தைத் தூக்கி மடித்துக் கட்டுவதை சண்டியன்கட்டு என்பர்.

பொதுவில் உசார்நிலையில் ~ சண்டைக்கான ஆயத்தத்தில் ~ ஆத்திரமேலீட்டில், கட்டிய வேட்டியை அல்லது சாரத்தைத் தூக்கி மடித்துக் கட்டுகின்ற நிலைமை இருப்பதனால் அதற்குக் காரணப் பெயராகச் சண்டியன்கட்டு என்று வழங்கப்படலாயிற்று.

தவிர, சண்டியன்கட்டு திரைப்படங்களில் முதன்மை இடத்தைப் பிடித்திருப்பதை யாரும் மறுத்து விடமாட்டார்கள்.

இச்சண்டிக்கட்டுத் தொடர்பில் பல்வேறு நகைச்சுவைக் கதைகள் உண்டு.

சண்டைகளின்போது அடங்கி ஒடுங்கி இருந்தவர்கள் தங்களின் உறவுகள், நட்புகள் வந்ததும் ஆ... கூ... என்று துள்ளி எழுந்து சண்டிக்கட்டுக் கட்டி அந்த இடத்தையே ரணகளமாக்கிவிடுவர்.

அதிலும் அடங்கி ஒடுங்கிக் கிடந்த சிலருக்கு கையில் நாலு காசு கிடைத்துவிட்டால், அவர்களும் சாரத்தைத் தூக்கி மடித்து சண்டிக்கட்டோடு தவறணைக்குப் போகின்ற உசாரையும் நடைமுறையில் கண்டிருக்கின்றோம்.

இதில் அடக்கமாகத் தவறணைக்குப் போனவர் பின்னர் சண்டிக்கட்டோடு அங்கிருந்து வெளிவருவதையும் பார்த்திருக்கிறோம்.

இது சண்டிக்கட்டுத் தொடர்பான ஒரு சிறு சங்கதி என்பதோடு இந்த விவகாரம் ஒருபுறமிருக்க,

இப்போது இலங்கை அரசாங்கத்துக்கு நிதி உதவி வழங்க சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்) உறுதிமொழி வழங்கியுள்ளது.

ஐ.எம்.எப் நிதியுதவி வழங்காவிட்டால், இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியாதென்ற கருத்துக்கள் வலுவடைந்த நிலையில்,

ஐ.எம்.எப் கைவிரித்து விடுமோ என்ற ஏக்கம் ஆட்சியாளர்களை ஆக்கிரமித்திருந்த நிலையில், இலங்கைக்கு நிதி உதவி வழங்குவதற்கு ஐ.எம்.எப் உடன்பட்டுள்ளது.

இந்தச் செய்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டவர்களை மார்தட்ட வைத்துள்ளதெனலாம்.

எனினும் ஐ.எம்.எப் வழங்குகின்ற நிதி உதவியை ஆதாரமாகக் கொண்டு இந்த நாட்டின் பொருளாதாரம் நிமிர்த்தப்படுமா? அல்லது நாடு பூராகவும் பௌத்த விகாரைகளை அமைத்தல், படைத்தரப்புக்கு அதிகூடிய நிதி ஒதுக்கீடு செய்தல், தமிழ் மக்களின் பூர்வீக இடங்களை ஆக்கிரமித்தல் என்பதற்குப் பயன்படுத்தப்படுமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

எதுஎவ்வாறாயினும் ஐ.எம்.எப் வழங்கிய நிதி உதவி மீண்டும் சிங்களப் பேரினவாதத்தை சண்டிக்கட்டு கட்ட வைக்குமாயின், அதுவே இந்த நாட்டில் ஏற்படப் போகும் அவலத்தின் அறிகுறியாய் அமையும்.

# நலன்புரி நடவடிக்கை விடயங்களில் நாணய நிதியம் தலையிடவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 4.3 மில்லியன் சிறுவர்களுக்கு நன்மை பயக்கும் ஜனசவிய மற்றும் மதிய உணவுத் திட்டம் போன்ற நலன்புரி நடவடிக்கைகளை குறைக்குமாறு சர்வதேச நாணய நிதியம் (IMF) ஒருபோதும் பரிந்துரைக்கவில்லை என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொலன்னாவையில் அண்மையில் நடைபெற்ற பேரணியில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாரிய அனர்த்தம் ஏற்பட்ட போது ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, ஜனசவிய போன்ற நலன்புரி செயற்பாடுகளையும், ஆடைத் தொழிற் சாலைகள் போன்ற அபிவிருத்தித் திட்டங்களையும் ஆரம்பித்ததாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஒரு நாட்டை இயக்குவதற்கான அனைத்து இயந்திரங்களும் செயலிழந்த நிலையில், நாட்டை மீட்க என்னென்ன வழிமுறைகளை கையாண்டால், அதை மக்கள் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு மின்கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (4,7)

## சிகிச்சை பலனின்றி குடும்பஸ்தர் பலி

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மன்னார், காத்தான்குளம் பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் காத்தாங்குளம், வட்டக்கண்டலைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான துரைராஜா அனுஸ்டன் (வயது- 34) என்பவராவார்.

கடந்த ஏழாம் திகதி வீட்டில் இருந்து பொருட்கள் வாங்குவதற்காக கடைக்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போது வேகக் கட்டுப்பாட்டை இழந்த் மோட்டார் சைக்கிள் காத்தான் குளம் பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் அடம்பன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மன்னர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு கடந்த எட்டாம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் நேற்று செவ்வாய்க் கிழமை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.(4,7,60)

## தெல்லிப்பளையில் திருட்டு மூன்று பேர் கைது

யாழ்.தெல்லிப்பழை பகுதியில் வீடு ஒன்றினுள் நுழைந்து கத்தி முனையில் கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக காங்கேசன் துறை விசேட குற்ற தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 6ம் திகதி இரவு வயோதிபர்கள் தனித்திருந்த வீட்டுக்குள் நுழைந்த நபர்கள் கத்தி முனையில் அச்சுறுத்தி வீட்டில் இருந்த பொருட்கள் மற்றும் பணமாகியவற்றைக்கொள்ளையடித்து சென்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை விசேட குற்ற தடுப்பு பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்படின் அடிப்படையில் இடம்பெற்ற விசாரணைகளில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கட்டுடை மற்றும் சங்கானை பகுதிகளை சேர்ந்தவர்கள் என குறிப்பிட்ட பொலிஸார் அவர்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4,7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** மட்டுவில் வீதி புத்தூர், ஊறணி, வீரவாணி, மண்கும்பான் நீர்ப்பாசன சபை, அல்லைப்பிட்டி, அல்லைப்பிட்டி தேவாலயத்தடி, வெண்புரவிநகர் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** சிதம்பரபுரத்திலும் மின்சாரம் தடைப்படும்.

## சிறப்புரிமை தொடர்பான பிரேரணை நிறைவேற்றம்

பாராளுமன்ற உறுப்பினர்களதும், பாராளுமன்றத்தினதும் சிறப்புரிமை மீறப்படுகின்றமை தொடர்பில் விசாரணை செய்து, பரிந்துரைகளை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட தெரிவுக் குழுவின் பரிந்துரைகளை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிப்பது தொடர்பான பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த பிரேரணையை நிறைவேற்றிக் கொள்ள ஆளும்கட்சி முயற்சித்தது.

இதன்போது, பிரேரணை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்தார்.

பிரேரணை தொடர்பில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின்போது, பிரேணைக்கு ஆதரவாக 75 வாக்குகளும், எதிராக 43 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதற்கமைய, 32 மேலதிகவாக்குகளால் குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தன்ர்.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, சுதந்திர மக்கள் கூட்டணி மற்றும் மேலவை இலங்கை கூட்டணி ஆகிய கட்சிகள் பிரேரணைக்கு எதிராக வாக்களித்திருந்தனர். (4,7)

## வீழ்ச்சிக்குப் பிறகு ஆட்சியை கைப்பற்ற எண்ணினார்கள்

### எதிர்க் கட்சிகளை சாடிய மகிந்தானந்த

ஐ.எம்.எப். இடமிருந்து கடனைப் பெறாமல் அரசாங்கம் வீழ்ந்த பின்னர் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்க எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் முயற்சித்தார்கள் என மகிந்தானந்த அழுத்தகமே குற்றம் சாட்டியுள்ளார்.

மக்களை வீதிக்கு இறக்கிவிட்டு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற எதிர்கட்சியால் பல அரசியல் நாடகங்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கு நிதி உதவி கிடைக்கக்கூடாது என்பதே அவர்களின் விருப்பம் எனவும் மகிந்தானந்த அழுத்தகமே குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்வாறு எண்ணியவர்கள் எதிர்க் கட்சியில் உள்ளார்கள் என்றும் இருப்பினும் அவர்களது பெயரை அம்பலப்படுத்த போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். (4,7)

## வெளிநாட்டு சிகரெட்டை பொலிஸிற்கு விற்க முயற்சி

### வர்த்தகர் கைது

யாழ்.காரைநகர் ஊரி பகுதியில் பொலிஸ் உத்தியோகஸ்த்தர் ஒருவருக்கு வெளிநாட்டு சிகரெட்டை விற்பனை செய்ய முயற்சித்தவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரைநகர் ஊரி பகுதியில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சிகரெட் ஒன்றை கொள்வனவு செய்துள்ளார்.

இதன்போது அவருக்கு வழங்கப்பட்ட சிகரெட் வெளிநாட்டு சிகரெட் என இனங்காணப்பட்ட நிலையில் குறித்த வர்த்தக நிலையத்தை சோதனையிட்டபோது அங்கிருந்து மூன்று பெட்டி வெளிநாட்டு சிகரெட் கைப்பற்றப்பட்டன.

சம்பவத்தை தொடர்ந்து ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் அதே பகுதியைச் சேர்ந்த 30 வயதான கடை உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். (4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்படுதல் என்ற சாதனைப் பட்டியலில் இலங்கை முதலிடம்

## சிறீதரன் எம்.பி காட்டம்

(கொழும்பு)

உலகத்திலே காணாமல் ஆக்கப்படுதல் அல்லது அழிக்கப்படுதல் என்ற சாதனைப் பட்டியல் வழங்கப்பட்டால் அதில் முதலாவது இடம் இலங்கைக்கே கிடைக்கும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் ஆட்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்படுகின்ற நிலையில் தற்போது தமிழர்களின் நிலங்கள், மாகாண சபைகள் என்பன காணாமல் போயுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கு இடையிலான விரோதம் காரணமாக அரசியலமைப்பில் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை தமிழர்களுக்கான அனைத்து அதிகாரங்கள், உரிமைகள், நிலங்கள் மற்றும் சபைகள் என்பன காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகவும் நீதி மன்றத் தீர்ப்புக்களை வழங்கிய நீதிபதிகள் பாராளுமன்றத் திற்கு அழைத்து அச்சுறுத்தப் படுவதாகவும் இவ்வாறான அனைத்து ஜனநாயக உரிமை மீறல்களும் இலங்கை யில் மட்டுமே இடம் பெறுவதாகவும் சிறீதரன் குற்றம் சுமத்தியிருந்தார். (நி)



# கடன் பெற்றுவிட்டதாக தம்பட்டம் அடிப்பதில் அர்த்தமில்லை-கிரியெல்ல

(கொழும்பு)

நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றுவிட்டு இப்போது கடன் வாங்கிவிட்டதாக தற்பெருமை பேசிப் பயனில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.



நாட்டின் கையிருப்பை பூஜ்ஜியமாக குறைத்த இந்த அரசாங்கம் அந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்காகவே கடனைப் பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பணத்தை வழங்குவதற்கான நிபந்தனைகள் என்ன வென்று அவர்களுக்குத் தெரியாது என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இதேநேரம் நாட்டின் நீதித்துறை, தேர்தல்கள் ஆணைக் குழு மற்றும் ஊடகவியலாளர் களை பாராளுமன்ற சிறப்புரிமை களை பயன்படுத்தி நசுக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

21 ஆம் திருத்தத்தின் மூலம் நீதித்துறை மற்றும் உயர் அதிகாரிகளின் சுதந்திரம் தற்போது பாராளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்தி அழிக்க முயல்வதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். (4)

# குருவிக்காட்டில் கழிவுகள் கொட்டும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை

## வனவள திணைக்களத்தினர்

(சாவகச்சேரி)

வனவளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வன தினத்தை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை காலை சரசாலை-குருவிக்கா்ட்டு சூழலில் சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது.



இயற்கைக் காடான குருவிக்காட்டில் இயற்கைக்கு கேடு விளைவிக்கும் வகையில் அறிவுறுத்தல்களையும் மீறி விஷமிகளால் கழிவுகள் கொட்டப்படும் நிலையில் குறித்த சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டு ஆங்காங்கே விழிப்புணர்வுப் பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

குருவிக்காட்டு பகுதியில் வீதியின் இருமருங்கும் பெரும்ளவான மருத்துவக் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதாகவும் அது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து உரியவர்களை கண்டறிந்து சட்டத்தின் முன்நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்க விருப்பதாகவும் வனவளத் திணைக்களத்தினர் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறித்த சிரமதான நிகழ்வில் வனவளத் திணைக்கள அதிகாரிகள், சுற்றுச் சூழல் அதி காரசபையினர், தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத் தர்கள், சாவகச்சேரி பிரதேச சபையினர் மற்றும் கிராம மக்கள் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)

# சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

கைதடி அரச முதியோர் இல் லத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் கடந்த மாதம் 27 ஆம் திகதி நோய் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டு கடந்த 17 ஆம் திகதி அன்று இறந்துள்ளார்.

இவரால் வழங்கப்பட்ட பெயர் சதாசிவம்பிள்ளை முரளி. விலாசம் 06 ஆம் வட்டாரம் கும்புறுப்பிட்டி.

ஆனால்இவரது உடைமையிலிருந்து பெறப்பட்ட இவரது ஆவணத்தில் பெயர் முஹமட் முவராஹ் மவிலானா செய்யது இவ்ராஹிம், தே.அ.அ.இல 700451518V, விலாசம்: 202/20/A, 19 வன பருமகசிரஸ் வீதி, கொழும்பு-14 ஆகக் காணப்படுகின்றது.

அத்துடன் உப பொலிஸ் பரிசோதகர் சீருடையில் இவரது புகைப்படம் பெறப்பட்டுள்ளது.

இவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சடலம் இதுவரையிலும் யாராலும் உரிமை கோரப்படவில்லை.

இவர் தொடர்பான மேலதிக தகவல்கள் இன்மையினால் குறித்த சடலத்தினை அடையாளம் காட்டி உரியவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (4)

# வரித்திருத்தங்களை மேற்கொள்ள தீர்மானம்

## *பிரதமர் அறிவிப்பு*

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ள நிலையில், அதிரடியான சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதுடன், அறிவிப்புகள் சிலவும் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், எதிர்வரும் சில மாதங்களில் வரித் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான கடனுதவிக்கு நிறைவேற்றுக்குழு அனுமதியளித்துள்ள நிலையில், எதிர்வரும் நாட்களில் பல மறுசீரமைப்புத் திட்டங்களை கொண்டு வருவதற்கும் தீர்மானித்துள்ளதாக பிரதமர் கூறியுள்ளார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 330 |
| தக்காளி | 150 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 200 |
| கோவா | 80 | 80 | 100 |
| கரட் | 100 | 180 | 200 |
| பூசணி | 80 | 70 | 60 |
| புடோல் | 160 | 160 | 160 |
| வாழைக்காய் | 150 | 150 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 150 |
| பாகற்காய் | 350 | 650 | 450 |
| வெண்டக்காய் | 200 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 160 |
| பயற்றங்காய் | 150 | 200 | 240 |
| லீக்ஸ் | 260 | 250 | 280 |
| பீற்றூட் | 150 | 150 | 160 |
| க்றிமிளகாய் | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 1500 | 2000 | 1500 |
| போஞ்சி | 240 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 140 |
| கீரை - 1 பிடி | .80 | 100 | 80 |
| தேசிக்காய் | 350 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80-120 |
| இராசவள்ளி | 300 | 300 | 350 |
| வெங்காயப்பூ | -- | 120 | 300 |
| முள்ளங்கி | 60 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 60 |
| வல்லாரை | 40 | 25 | 60. |
| ஈரப்பலா | 80 | 160 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேருக்கு நேர்...

காயமடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து குறித்து மேலும் தெரியவருகையில்,

அடம்பனில் இருந்து உயிலங்குளம் நோக்கி வயோதிபர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.

இதன்போது உயிலங்குளத்தில் இருந்து அடம்பன் நோக்கி 2 இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது குறித்த இரண்டு மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளாகியது.

இதன்போது உயிலங்குளத்தில் இருந்து அடம்பன் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

ஏனைய இருவரும் படுகாயம் அடைந்தனர். படுகாயம் அடைந்த இருவரும் உடனடியாக மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த அடம்பன் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7,285)

## எரிபொருள்...

வாய்க்கிழமை இடம்பெற்ற பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் மீதான விவாதத்தில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கச்சா எண்ணெய் விலை குறைந்து வருகிறது என்றும் ரூபாயின் மதிப்பும் வலுவடைந்து வருகிறது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே எரிபொருளுக்கான விலையில் நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி தனக்கு ஏற்கெனவே பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார். (4-7)

## திருமந்திர...

நாளை மறுதினம் 24ஆம் திகதி மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில், இலங்கை சிவபூமி அறக்கட்டளையினால் நிறுவப்பட்டுள்ள திருமந்திர அரண்மனை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

3 ஆயிரம் தமிழ்ப்பாடல்கள் உடைய பல நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த வரலாற்றுப் பெட்டகமான திருமந்திரத்தை கையால் உளிகொண்டு மூன்று ஆண்டுகளாக இளைஞர்கள் கருங்கல்லில் செதுக்கியுள்ளனர்.

இந்தப் பாடல்கள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வீதியில் அமைக்கப்பட்டுள்ள திருமந்திர அரண்மனையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

108 சிவலிங்கம் கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளன. 3 ஆயிரம் திருமந்திரப் பாடல்களும் வாசலிலிலே அசையாத் தேராக சிற்பத்தேர் ஒன்றும் உருவாக்கப்பட்டு அந்தத் தேரிலே சிவபெருமானும் திருமந்திரத்தைப் படைத்த திருமூலரும் சிற்பமாக எழுந்தருளச் செய்யப்பட்டுள்ளனர்.

இது மட்டுமல்ல திருமந்திர அரண்மனைச் சுற்றாடல்கள் புனிதம் பெறக்கூடியதாக அங்கே பல்வேறு விடயங்கள் நிலைநாட்டப்பட்டு சம்பிரதாயபூர்வமாக கிழக்கிலங்கை மக்களிடம் கையளிக்கும் நிகழ்ச்சி நாளை மறுதினம் 24ஆம் திகதி இடம்பெறவுள்ளது. 1330 திருக்குறள் இந்தியாவில் கருங்கல்லில் பதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் உலகத்திலேயே 3 ஆயிரம் தமிழ்ப்பாடல்களை கருங்கல்லில் பதிப்பித்த பெருமை சிவபூமி அறக்கட்டளையைச் சாரும். இதைத் தாங்குகின்ற பெருமை கிழக்கிலங்கை மக்களைச் சாரும். அற்புதமான இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (4-7,33)

## குடத்தனையில்...

அம்மன் பகுதியிலிருந்து மணல் ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பார ஊர்தியும் பருத்தித்துறை பகுதியிலிருந்து மருதங்கேணி நோக்கி பயணம் செய்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்றவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

அவரோடு கூட வந்த அவரது மகள் தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சாரதி கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4,7,33,60,104)

## யாழ்.பல்கலை...

தூதுவர் கோபால் பாக்லே இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் தெரிவு செய்யப்பட்டு முன்மொழியப்படும் ஒவ்வொரு மாணவனுக்கும் நடப்புக் கல்வி ஆண்டில் இருந்து, அடுத்து வரும் ஒரு வருட காலத்துக்கு இந்த நிதியுதவி வழங்கப்படும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களில் இருந்தும் இளநிலைப் பட்டதாரி மற்றும் பட்டபின் மாணவர்கள் இத் திட்டத்தின் கீழ் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்படலாம். நான்கு இளநிலை மாணவர்களுக்கு ஒரு பட்டப் பின் படிப்பு மாணவர் என்ற அடிப்படையில் தெரிவு இடம்பெறும். இதற்கென இந்தியத் தூதரகத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கமைய பொருளாதார நிலையில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டம் பற்றிய இந்தியத் தூதுவரின் கடிதம் கிடைத்துள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாணவர் நலச் சேவைகள் பணிப்பாளர் பேராசிரியர் கே. சசிகேஷ் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன. (4-7,33)

## சுற்றுலா...

ருந்தது.

இந்நிலையில் குறித்த நான்கு இளைஞர்களும் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலையில் அம்பாறை மாவட்டம் கல்முனை, சாய்ந்தமருது மற்றும் சம்மாந்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த 10 இளைஞர்கள் வெல்லவாய - எல்லாவல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்றுள்ளனர்.

இவர்களுள் 21-22 வயதிற்கும் இடைப்பட்ட 4 இளைஞர்கள் மரணமடைந்துள்ளனர்.

இவர்களில் கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும் சம்மாந்துறை மற்றும் சாய்ந்தமருதைச் சேர்ந்த இருவருமே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

இந்த மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 21/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1521
மேஷம் 0 1 2 0 3 0

தன நிதானய
திகதி -2023.03.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1096
T 01 62 75 80

கொவிசெத
திகதி 2023.03.21
சீட்டிழுப்பு இலக்கம் 3308
G 06 07 32 34

மெகா பவர்
திகதி 21/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1414
U 13 10 34 37 59

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.03.21
சீட்டிழுப்பு இலக்கம் 375
விருச்சிகம் 12 51 54 57 விருச்சிகம்

மஹஜன சம்பத
திகதி 2023/03/21
சீட்டிழுப்பு இலக்கம் 5066
A 8 2 1 4 4 6

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2041
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.03.21
தினம் செவ்வாய்க்கிழமை
Z 39 45 55 76
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 5,057,500/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.21
சீட்டிழுப்பு இல : 4202
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 5,315,280/-
29 33 39 58 P

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 303
சீட்டிழுப்பு திகதி 2023.03.21
செவ்வாய்க்கிழமை
01 24 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,809,980/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2023-03-21
வெற்றி வாரம் 3753
வர்ணம் சிவப்பு
12 39 47 62 கும்பம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,824,640/-

லக்ன / ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 26 29 36 38 54
சீட்டிழுப்பு வாரம் 1217
இராசி கும்பம்
திகதி 2023.03.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 315,276,308.20

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1867
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.03.21
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,818,020/-
10 40 53 67 P


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபம் கல்வி நிலையம்

இல.11, டேவிட் வீதி (கலைக்கோட்டம் அருகில்), யாழ்ப்பாணம்.

**புதிய கல்வியாண்டு – 2023**

## தரம் 6 முதல் O/L வரை

தமிழ் மொழி மூலம், English Medium

**ஆரம்பம் - 25.03.2023, சனிக்கிழமை மாலை 3.30 மணி**

அன்பான பெற்றோர்களே!

- பெற்றோர், மாணவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க இக் கல்வியாண்டு முதல் நிறுவன இயக்குனரும், விஞ்ஞான பாடத்தைக் கற்பிப்பதில் பல வருட அனுபவம் கொண்டவருமான திரு.Kobi Sir அவர்கள் தரம் 6 தொடக்கம் 11 வரையான அனைத்து வகுப்புகளிற்கும் (தமிழ், ஆங்கில மொழி மூலம்) விஞ்ஞான பாடத்தைக் கற்பிப்பார் என்பதனைத் தங்களிற்கு அறியத் தருகின்றோம்.
- தரம் 10, 11 இற்கு மட்டும் வரலாறு, விஞ்ஞான பாடங்களிற்கு தனிப்பாட அனுமதி வழங்கப்படும். (நிபந்தனைக்கு உட்பட்டது)
- தரம் 10, 11 இற்கான ICT, வர்த்தகம், தமிழ் இலக்கியநயம், ஆங்கில இலக்கியநயம் (English Literatue) ஆகிய பாடங்களும் நடைபெறுகின்றன.

**அனுமதிகள் வழங்கப்படுகின்றது.** (14993)

தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சி மிகு எதிர்காலம் | தொடர்புகளுக்கு : 077 224 7781



# விற்பனைக்கு

- லயன் பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
- வாழைக்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (14976)

**077 172 1074**



# LED Video Wall for Rent

(14987)

**075 111 2222**



# வேலையாட்கள் தேவை

கே.கே.எஸ் வீதி கோண்டாவிலில் இயங்கும் தளபாட விற்பனை நிலையம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு (14964)

**077 713 0872**



# விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/ மணமகள் தேவையெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு மணமகன்/ மணமகள் தாராளமாக உள்ளனர். (14947)

**+14372446737**
**+16476571347 Canada**
**077 240 9276 Srilanka**



# கல்யாண மாலை

## பதவி வெற்றிடம்

- **முகாமையாளர்**
  (இருபாலாரும்)
  ஓய்வுபெற்றவர்களுக்கு முன்னுரிமை
- **முகாமைத்துவ உதவியாளர்கள்**
  (பெண்கள்)
  25 வயதிற்கு மேற்பட்டோர்
  யாழ். நகரிற்கு அண்மையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு

**076 097 3127**


## 330 மில். அமெ...

வும் சவாலான பொருளாதார கொள்கைசார் மறுசீரமைப்புக்களைப் பாராட்டியுள்ள நாணய நிதிய அதிகாரிகள், இம் மறு சீரமைப்புக்கள் மற்றும் வரியறவீடு என்பன வறிய, பின் தங்கிய சமூகப் பிரிவினர் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை இழிவளவாக்கு வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர். (4,7)


# ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி

## பழைய மாணவர்களுக்கான விசேட ஒன்றுகூடல்

எமது கல்லூரியின் 150 ஆவது யூபிலி விழாவினை முன்னிட்டு எதிர்வரும் (26.03.2023) ஞாயிற்றுக்கிழமை அனைத்து பழைய மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் எமது கல்லூரி மண்டபத்தில் மாலை 3.30 மணிக்கு இடம்பெறும். அனைத்து பழைய மாணவர்களும் தவறாது இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவும்.

செயலாளர் (14992) அதிபர்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127


# கண்ணீர் அஞ்சலி



## திருமதி பொன்.மதிமுகராசா விஜயலட்சுமி

அன்னத்தில் அன்பையும் வீரத்தையும்
சேர்த்தூட்டிய எம் தாயே!
உண்மையை பேசச் சொல்லி எமக்கு
வழிகாட்டிய தெய்வமே!
கலங்கரை விளக்காய் நாம் கரை சேர
திசைகாட்டிய கோவிலே!
வாழ்வென்றால் இன்பமும் துன்பமும்
இணைந்ததுதான் என்பதை எம் நெஞ்சில்
பதியவைத்த பசும் பொன்னே!
எங்கள் காலம் உள்ளவரை தாய் சொல்லைத்
தட்டாத எங்கள் வீட்டுப் பிள்ளையாய்
வாழ்ந்திடுவோம் அம்மா

தோற்றம் 15.12.1948
மறைவு 15.03.2023

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**

**பொன்.மதிமுகராசா விஜயகாந்த்**
தலைவர், அனைத்துலக எம்.ஜீ.ஆர் பேரவை, சமூக சேவை அமைப்பாளர்,
ஸ்ரீமுருக பவனம், தாவடி வடக்கு, கொக்குவில்.
அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம், இலங்கைத் தலைமை கழகம்
அனைத்துலக சமூக சேவைகள் நற்பணி, பொதுப்பணிச் செயலகம்
[கே.கேஸ்.வீதி தாவடிச் சந்தி, யாழ்ப்பாணம், இலங்கை.]
077 620 2077, 077 368 6304

**ஸ்ரீமுருக பவனம், தாவடி வடக்கு, கொக்குவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.